# இந்தியா-பிரான்ஸ் இணைப்பு நகரமாக புதுவை விளங்குகிறது

## பிரெஞ்சு துணை தூதர் பேச்சு

புதுச்சேரி, நவ. 19: புதுச்சேரி பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தின் 60-வது ஆண்டு விழா நேற்று கொண்டாடப்பட்டது. பிரெஞ்சு ஆய்வு நிறுவன இயக்குநர் பியாரி கிராட் தலைமை தாங்கினார். பிரெஞ்சு துணை தூதர் பிலிப் ஜான்வியர் காமியாமா விழாவை துவக்கி வைத்து பேசியதாவது.

இந்தியாவில் மட்டுமல்ல சர்வதேச அளவிலும் பிரெஞ்சு ஆய்வு நிறுவனம் பிரசித்திபெற்று உள்ளது. உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு சிறந்த பங்களிப்பை அளித்து வருகிறது. இந்தியா-பிரான்ஸ் இடையே கலாச்சார இணைப்புக்கான நகரமாக புதுச்சேரி விளங்குகிறது.

புதுவையில் உள்ளதால் பிரெஞ்சு ஆய்வு நிறுவனம் அனைத்து துறைகளிலும் குறிப்பிடத்தக்க ஆய்வுகளை செய்துள்ளது. குறிப்பாக இந்திய நாட்டு மக்களைப் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 8500-க்கு மேற்பட்ட பழங்கால அரிய ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. வனவளம், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் கர்நாடகம், தமிழகம், கேரள மாநில வனத்துறைகளோடு இணைந்து செயல்பட்டு வருகிறது. பயனுறு தகவல் களஞ்சியமாக பிரெஞ்சு ஆய்வு நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இங்கு 60 ஆயிரம் நூல்கள் கொண்ட நூலகம் இயங்குகிறது. பல்வேறு தரப்பினரிடையே கலாச்சார பரிமாற்றம், சகோதரத்துவம், சகிப்புத்தன்மை வளர்ப்பதிலும் ஆய்வு நிறுவனம் பங்காற்றி வருகிறது, என்றார்.

ஓய்வு பெற்ற நீதிபதி தாவீது அன்னுசாமி, இந்தியவியல் துறைத் தலைவர் சுப்பராயலு, சூழலியல் துறை தலைவர் பிரான்கோஸ் முனோஸ், சமூக அறிவியல் துறை தலைவர் ஆட்ரி ரிச்சர்டு ஃபெரோட்ஜி மற்றும் புதுச்சேரி, பிரான்ஸ், லண்டன் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்தும், இந்தியாவின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் இருந்தும் 150-க்கும் மேற்பட்ட அறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்கள் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தனர்.

நிறைவாக பாரீஸ் பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.